

நெல்லை மாநகராட்சி வர்த்தக மையத்தில் நடைபெற்று வரும் 8 வது பொருநை புத்தகத் திருவிழா 9 ம் நாள் நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று தனது சொந்த நிதியிலிருந்து பள்ளி கல்லூரி மாணவ,மாணவியர் களுக்கு பல்வேறு தலைப்பில் கொண்ட 1000 ம் நூல்களை மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா.சுகுமாரிடம் வழங்கினார். உடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ்,கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார் மற்றும் பணியாளர்கள் நல வாரிய தலைவர் விஜிலா சத்யானந்த் உள்பட பலர் உள்ளனர்.

## திருவண்ணாமலை

# தூய்மை அருணைப் பணிகள் - அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

### கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவு!



திருவண்ணாமலை, பிப்.11

திருவண்ணாமலையில் வாரந்தோறும் நடைபெறும் தூய்மை அருணை பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார். கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்றிட உத்தரவிட்டார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளரா கக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல் பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கி ணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக்கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

கிரிவலப்பாதையில் உள்ள 20 குளங்களை தூய்மை அருணை அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் சீரமைப்பது என தீர்மானிக் கப்பட்டு, பணிகள் நடை பெற்று வருகிறது.

09.02.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு, திருவண்ணாமலை நகரில் நடைபெறும் தூய் மைப் பணிகள், நடப்பட்ட மரக்கன்றுகளை பராமரிக் கும் பணி ஆகியவற்றை பொதுப்பணித் துறை அமைச் சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காலை 7.00 மணிக்கு திருக்கோயிலூர் ரோடு, ஆண் கள் மேல்நிலைப்பள்ளியை சுற்றியுள்ளப் பகுதிகளில் கால்வாய் அடைப்பு, மரக் கன்றுகள் பராமரிப்பதை பார்வையிட்டு, பொதுப்ப ணித்துறை அமைச்சர் பார் வையிட்டு ஆலோசனை களை வழங்கினார்.

காலை 7.15 மணிக்கு, வார்டு எண்.38 ஆடுதொட் டித் தெருவில் நடைபெற்று வரும் கால்வாய் அடைப்பு, மண்மேடு அகற்றுதல்,

காலை 7.30 மணிக்கு, வார்டு எண்.36 கல் நகர் பகு தியில் மண்மேடுகள் மற்றும் கால்வாய் தூர்வாரும் பணி யினை பார்வையிட்டும்,

காலை 7.45 மணிக்கு, வார்டு எண்.37 கோபால் தெருவில் நடைபெறும் தூய் மைப் பணிகள்,

காலை 8.00 மணிக்கு, வார்டு எண்.17 இராமலிங்க னார் மெயின் தெருவில் நடைபெறும் கால்வாய் அடைப்பு புதர்மேடுகளை அகற்றுதல்,

காலை 8.15 மணிக்கு, வார்டு எண்.12 கட்டபொம் மன் தெருவில் நடைபெற்று வரும் கால்வாய் தூர்வாரும் பணி,

காலை 8.30 மணிக்கு, வார்டு எண்.11 கார்கானாத் தெரு பகுதியில் நடைபெறும் கால்வாய் தூர்வாரும் பணி யும், மரக்கன்றுகளை பராம ரிக்கும் பணியினையும் பார் வையிட்டு, பொதுப்பணித்துறை அமைச் சரும், அமைப்பாளருமான எ.வ.வேலு ஆலோசனை களை வழங்கினார். ஆய் வின்போது கால்வாய் ஆக்கி ரமிப்புகளை உடனடியாக அகற்றிட அலுவலர்களுக்கு உத்திரவிட்டார்.

தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற் பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என். அண்ணாதுரை.எம்.பி., இரா. ஸ்ரீதரன், ப.கார்த்தி வேல்மா றன், ப்ரியா ப.விஜயரங்கன், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ. எழில்மா றன், எஸ்.கண்ணதாசன், ஏ.ஏ.ஆறுமுகம், ம. வினோத் குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ணமூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், சு.ராஜாங்கம், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ் கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளி தாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாக ராஜ், கு.குமார், மண்டி.பிர காஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், அ.பழனி, கே.பிரகாஷ், பி.ஜி. முருகன், கோபி.சங்கர், சென்னை.சுரேஷ், முபாரக், லயன்.ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக் கிம்சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு.எஸ்.பிரபு மற்றும் மாட வீதி ஒருங்கிணைப்பா ளர்கள் இல.குணசேகரன், சினம்.பெருமாள், ஆர்.கே.பி. பாஸ்கர், ஜீவரேகா விஜய ராஜ், அருணை.வெங்கட் உட்பட ஆயிரக்கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.

## பேரறிஞர் அண்ணா 56வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு

# சிவகங்கை மாவட்டத்தில் கோவில்களில் பொது விருந்து!

### காரைக்குடியில் அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் பங்கேற்பு!

சிவகங்கை. பிப். 11–

பேரறிஞர் அண்ணா வின் 56வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் சிவ கங்கை மாவட்டத்தில் உள்ள கோவில்களில் பொது விருந்து வழி பாடு நடைபெற்றது.

இதில் காரைக்குடியில் முத்துமா ரியம்மன் கோயிலில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியக ருப்பன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில்ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டார்கள்.

முன்னாள் அமைச்சர் மு.தென் னவன், இந்து சமய அறநிலையத் துறை மண்டல இணை ஆணையர் திருமதி பாரதி,உதவிஆணையர் கவிதா, எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. மாநகர துணை மேயர் நா. குணசே கரன் தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் திரு மதி புவனேஸ்வரி இளங்கோவன் மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பி னர் வெள்ளையன், பேரூராட்சி மன்ற தலைவர் கோகிலராணி நாரா யணன் ,ஆகியோர் கலந்து கொண் டார்கள்.

தொடர்ந்து 300க்கும் மேற்பட்ட பெண்களுக்கு சேலையினை கூட் டுறவுத் துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் வழங்கினார். சிவ கங்கை நகர் காசி விஸ்வநாதர் ஆல யத்தில் நகர் மன்ற தலைவர் சி.எம். துரை.ஆனந்த் தலைமையில் பொதுவிருந்து நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கண்காணிப் பாளர் வேல்முருகன், நிர்வாகிகள் முருகேசன், செந்தில் வேல் பாண்டி யன், ஜெயகாந்தன், ராமதாஸ், உட் பட பொதுமக்கள் கலந்து கொண் டார்கள் நிகழ்ச்சி யில் பெண்களுக்கு சேலைகள் வழங்கப்பட்டது.கொல் லங்குடி அருள்மிகு வெட்டுடையார் காளி அம்மன் கோவில் தாய்மங்க லம் முத்துமாரியம்மன் கோயில் உட் பட மாவட்டத்தில் உள்ள பல்வேறு கோயில்களில் பேரறிஞர் அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு பொதுவிருந்து நடைபெற்றது.



பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு அநீதி விளைவித்த மோடி அரசைக் கண்டித்து கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழகம் சார்பில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் வடக்கு மாவட்ட கழக செயலாளர், தா.உதயசூரியன் எம்.எல்.ஏ தலைமையில் சங்கராபுரம் பேருந்து நிலையம் வளாகத்தில் நடைபெற்றது, இக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் நெல்லிக்குப்பம் புகழேந்தி, வண்ணை அரங்கநாதன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கண்டன சிறப்புரையாற்றினார்கள்,மேலும் இக்கூட்டத்தில் வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் வ.அன்பழகன், மாநில மகளிர் அணி துணை செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்கள், இதில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. முதல் கட்டமாக இராணிப்பேட்டை மற்றும் காஞ்சிபுரம் வடக்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 11.02.2025 செவ்வாய்க்கிழமை | மாலை 4.00 மணி | இராணிப்பேட்டை | எஸ்.கே. மஹால், இராணிப்பேட்டை |
| 12.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | காஞ்சிபுரம் வடக்கு | கார்த்திக் பேலஸ் மண்டபம், குன்றத்தூர் – மாங்காடு சாலை, சிக்கராயபுரம். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18

நாள் : 09-02-2025



## புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து அறந்தாங்கியில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி - முனைவர். பொன்னேரி சிவா - குடியாத்தம் புவியரசி கண்டன உரை!

புதுக்கோட்டை. பிப் . 11-

புதுக்கோட்டை மாவட் டம் அறந்தாங்கியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக சார்பில் நடைபெற்ற மத்திய பட் ஜெட்டில் நிதி ஒதுக்காமல் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மத்தியஅரசை கண்டித்து மாபெரும் கண் டன பொதுக்கூட்டம் நடைபெற்றது.

நகர கழக செயலாளர் ராஜேந்திரன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கூட்டத் திற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிர மணி யன் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சரும்,புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான எஸ்.ரகு பதி கண்டன உரையாற்றி னார். கண்டன உரை நிகழ்த்திய அமைச்சர் எஸ். ரகுபதி, தமிழ்நாட்டிற்கு கேட்ட திட்டங்கள் எது வுமே கிடைக்கவில்லை. பீகாரில் தேர்தல் வருது என்பதற்காக 5 .திட்டங் களை மத்திய அரசு அறி வித்துள்ளது. அங்கு நிதீஷ் குமாரும் ஒட்டு வாங்க மாட்டார், பா.ஜ.க.வும் ஓட்டு வாங்க முடியாது. அடுத்த தேர்தலில் இந்தியா முழுவதும் தமிழக முதல் வர் சுற்றுப்பயணம் மேற் கொண்டு மோடி ஆட் சியை அகற்றி வீட்டிற்கு அனுப்புவார். அறுபடை வீடும் முருக பெருமானும் தமிழ் கடவுள்தான். ஆகவே அண்ணாமலை எதற்குமே சொந்தம் கொண்டாட முடியாது. பக்தி என்ற பகல் வேசத் தால் தமிழகத்தை ஏமாற்ற முடியாது. தமிழக மக்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல. அவர்கள் பழனிக்கும் பாத யாத்திரை செல்வார்கள். திராவிட மாடல் ஆட்சிக்கு வாழ்த்துக்களும் சொல் வார்கள். அதுதான் தமிழ் நாடு அதுதான் தமிழகம். அதை இந்தியா உணர்ந்து இருக்கிறது. பாஜக உணர வில்லை என பேசினார்.

கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் பொன்னேரி சிவா, குடி யாத்தம் புவியரசி ஆகி யோர் கண்டன உரையாற் றினார்கள்.. கூட்டத்தில் திமுக தீர்மானக் குழு உறுப் பினர் சி.ராமநாதன், முன் னாள் சட்டப் போவை உறுப்பினர் உதயம் சண்மு கம், திமுக தேர்தல் பணிக் குழு செயலாளர் பரணி கார்த்திகேயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.ஆர்.கே.கலைமணி, இரா.ஆனந்த், மாவட்ட துணைச் செயலாளர்கள் அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாதுரை,

ஒன்றிய செயலாளர்கள் சக்தி ராமசாமி, எஸ்.எம். சீனியார் , வே.பொன் துரை, பொன். கணேசன், அழகு என்ற சிதம்பரம், கே.பி.கே. டி.தங்கமணி, வி.ஆர்.இளையராஜா, குமார் என்ற துரைக் கண்ணு, கே.எஸ்.ரவி, அரு. வடிவேலு, தலைமைச், முன்னாள் நகர் மன்ற தலைவர் மாரியப்பன், முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் மகேஸ்வரி சண் முகநாதன், நகர மன்ற துணைத் தலைவர் தி.முத்து, கீரமங்கலம் நக ரச் செயலாளர் கே.சி.சிவக் குமார்,

மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் விமலாதிராஜன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.ஆர். ராமசாமி, மாவட்ட மக ளிர் தொண்டரணி அமைப் பாளர் பாத்திமா பீவி, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு ப பேரவை அமைப்பாளர் இரா.மேக நாதன், மாவட்ட விளை யாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தேவி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ரம்யா பாலு, மாவட்ட நெசவா ளர் அணி தலைவர் பழனி யப்பன், அறந்தாங்கி தொகுதி ஒருங்கிணைப்பா ளர் செந்தில்வேலன், திரும யம் தொகுதி ஒருங்கி ணைப்பாளர் சுரேந்திரன், சிவகுமார், மாநில, மாவட்ட, ஒன்றிய நகர நிர் வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர் கள், .துணை அமைப்பா ளர்கள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட இளைஞரணி அமைப்பா ளர் த.மணிராஜன் நன்றி கூறினார்.



தேனி வடக்கு மாவட்டம்சார்பில் போடியில்தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டம்போடி நகர செயலாளர் புருசோத்தமன் தலைமையில் நடைபெற்றது. சரவணகுமார் எம்.எல்.ஏ. ஒன்றிய செயலாளர்கள் லட்சுமணன். அய்யப்பன். ரத்தின சபாபதி. சக்கரவர்த்தி. முருகேசன், எல்.எம்.பாண்டியன், நகர செயலாளர்கள் நாராயண பாண்டியன், முகமது இலியாஸ் ஆகியோர் முன்னிலவைத்தனர். மாநில செயற்குழு உறுப்பினர் சங்கர், மாநில பொதுக்குழு உறுப்பினர் ராஜா ரமேஷ், முன்னாள் நகர செயலாளர் மா வி செல்வராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள். வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமைக் கழக பேச்சாளர்கள் கவிஞர் தமிழ் தாசன், வயலூர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். போடி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் நேருபாண்டியன், பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் முத்துராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் பி.டி. செல்லப்பாண்டி, மாவட்ட துணை செயலாளர்கள் செந்தில்முருகன், கண்ணன், மாவட்ட பொருளாளர் சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக மூத்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.